
திமிர்ந்த ஞானச்செருக்கு நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## புதுச்சேரியில் உரத் தட்டுப்பாடு

First Published : 23 Jun 2011 03:46:06 AM IST




புதுச்சேரி, ஜூன் 22: புதுச்சேரியில் அரசு உர விற்பனை நிலையங்களில் உரத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் வெளிமார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து விவசாயிகள் உரங்களை வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி அரசின் வேளாண்துறை மூலம் விவசாயிகளுக்கு இடு பொருள்கள், உரம், உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பாசிக் என்ற அரசு நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் விவசாயிகளின் தேவைகளை அறிந்து ஒவ்வொரு பருவக் காலத்துக்கும் ஏற்ற விதைகள், இடு பொருள்கள், உரங்களை வாங்கி விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுத்து வந்தது.

இதைத் தவிர வேளாண்துறையின் மூலம் பல்வேறு இடங்களிலும் உழவர் உதவியகம் தொடங்கப்பட்டுள்ளது. உழவர்களுக்கு உதவி செய்ய தொடங்கப்பட்ட இந்த நிறுவனங்களில் இப்போது தேவையான உரங்கள் கிடைப்பதில்லை.

இதனால் விவசாயிகள் வெளிமார்க்கெட்டில் உரங்கள் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது.

டிஏபி உரம் வெளிமார்க்கெட்டில் 50 கிலோ ரூ.750 அளவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுவே அரசு விற்பனை நிலையங்களில் ரூ.550 அளவுக்குக் கிடைக்கும். இதனால் விவசாயிகளுக்கு 1 மூட்டைக்கு ரூ.200 அளவு மிச்சமாகும். ஆனால் இப்போது அரசு விற்பனை நிலையங்களில் டிஏபி உரம் கிடைக்கவில்லை.

இது குறித்து புதுச்சேரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலர் து. கீதநாதன் கூறியது: புதுச்சேரியில் தொடர்ச்சியாக உரம் மற்றும் இடுபொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. சாகுபடி செய்வதற்குத் தேவையான நேரத்தில் டிஏபி போன்ற அடி உரங்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. அரசின் பாசிக் டெப்போவில் இருப்பு இல்லை என்றே நிலைமை இருக்கிறது என்றார்.

நம் நாட்டில் உரம் பயன்படுத்தும் மாநிலங்களில் புதுச்சேரி எப்போதும் முன்னிலையில் இருப்பதாக புள்ளி விவரங்கள் தேரிவிக்கின்றன. ஆனால், போதிய அளவில் அரசு விற்பனை நிலையங்களுக்குக் கொள்முதல் செய்யாத நிலையிலும் விவசாயம் செய்யும் பரப்பளவு பெருமளவு குறைந்துள்ள நிலையிலும் இந்த உரங்கள் எங்கு செல்கின்றன என்பது புதிராக இருக்கிறது.

ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்கவும் மண் தன்மையைப் பாதுகாக்கவும் ஜானகிராமன் தலைமையிலான திமுக கூட்டணி அரசில் இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் வேளாண்துறை அமைச்சராக இருந்த ஆர். விசுவநாதன் இயற்கை உரம் தயாரிக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.

காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் அருகே குப்பையிலிருந்து அங்கக உரம் - இயற்கை உரம் தயாரிக்கப்பட்டது. இந்த உரம் குறைந்த விலையில் விவசாயிகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்து வந்தது. அதற்குப் பிறகு அதில் போதிய அக்கறை செலுத்தப்படவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க விவசாயிகளுக்குச் சேவை செய்ய வேண்டிய அரசின் பாசிக் நிறுவனம் கடந்த நிதியாண்டில் உரம் உள்ளிட்ட பொருள்கள் வாங்குவதற்கு கொடுக்கப்பட்ட ரூ.3 கோடியில் துணிக் கடை ஒன்றை முதலீடு செய்து திறந்தது. இதனால்தான் இப்போது உரம் வாங்குவதற்குப் போதிய நிதி இல்லாத நிலை உருவாகிவிட்டது என்று புகார் எழுந்துள்ளது.

**ரோஜா மலர் சாகுபடிக்கு மானியம்**

First Published : 23 Jun 2011 02:26:19 AM IST



புதுக்கோட்டை: ரோஜா மலர்களை முறையாக சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம். ரோஜா மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 7,500 மானியமாக தோட்டக் கலைத் துறை வழங்குகிறது.

ரகங்கள்: எட்வர்ட் ரோஜா, ஆந்திர சிகப்பு ரோஜா.

மண் வகை: வடிகால் வசதியுள்ள மணல் பாங்கான வண்டல் நிலம்.

**நடவு செய்யும் இடைவெளி:** வரிசைக்கு வரிசை 2 மீ., செடிக்குச் செடி ஒரு மீட்டர் இடைவெளி இருக்குமாறு, 1.5 அடிக்கு குழி பறிக்க வேண்டும். செடிகளை நடுவதற்கு முன்பு, குழியில் 10 கிலோ தொழு உரம், 20 கிராம் லிண்டேன் தூள் ஆகியவற்றைக் கலந்து இட வேண்டும். தொடர்ந்து, செடியில் புதுத் தளிர் விடும்வரை இரண்டு நாள்களுக்கு ஒரு முறையும், அதன்பிறகு, வாரம் ஒரு முறை என்ற வகையில் தண்ணீர்விட வேண்டும்.

**உர அளவு:** ஜூலை மாதம் ஒரு முறையும், செடிகளை கவாத்து செய்த பிறகு அக்டோபரில் ஒரு முறையும் செடிக்குச் செடி 10 கிலோ தொழு உரம், 15 கிராம் யூரியா, 75 கிராம் சூப்பர் பாஸ்பேட், 20 கிராம் பொட்டாஷ் ஆகிய உரங்களை இட வேண்டும்.

**கவாத்து செய்யும் முறை:** செடிகள் பூக்காத பருவமே கவாத்து செய்ய ஏற்ற தருணமாகும். பெரும்பாலும் அக்டோபர், நவம்பர் மாதங்களே கவாத்து செய்ய ஏற்றவை. வலுவிழந்த, நோய்வாய்ப்பட்ட, வளைந்த, பலன் தராத கிளைகளை வெட்டி அகற்றி, எஞ்சிய கிளைகளை பாதியளவாகக் குறைத்து, வெட்டுப் பகுதியில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு, கார்பரில் 50 சத நனையும் தூள் கலவையை பூச வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு:**

**செதில் பூச்சிகள்:** செதில் பூச்சி, கடின செதில் பூச்சி என இரு வகை பூச்சிகள் இலை, தண்டு, இளங்குருத்து பகுதிகளில் குவியலாக இருந்து செடியின் சாற்றை உறிஞ்சி உண்ணும். இதைக் கட்டுப்படுத்த டீசல் அல்லது மண்ணெண்ணெயில் நனைத்த பஞ்சைக் கொண்டு செதில் பூச்சிகளை அழுத்தித் துடைத்து அகற்ற வேண்டும். அதிகமாகப் பாதிக்கப்பட்ட கிளைகளை அகற்றி எரித்துவிட வேண்டும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் கவாத்து செய்யும் போது ஒரு

முறையும், மீண்டும் மார்ச், ஏப்ரலில் ஒரு முறையும் மாலத்தியான் 50 ஈசி அல்லது பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. அளவில் கலந்து தெளிக்கலாம். அல்லது கார்போபியூரான் 3 சத குருணை மருந்தை செடிக்கு 5 கிராம் வீதம் இடலாம்.

**இலை வெட்டும் குளவிகள்:** இலைகளை அரை வட்ட வடிவில் வெட்டி எடுத்துவிட்டு, அந்த இலைப் பகுதியில் குளவிகள் கூடு கட்டி இலைகளைச் சேதப்படுத்தும். இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. பூச்சிக்கொல்லி மருந்தைக் கலந்து தெளிக்க வேண்டும்.

மாவுப் பூச்சி: வெண்மையான பஞ்சு போ தண்டு, இலைக் குருத்தில் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். இதைக் கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் அல்லது பாரத்தியான் மருந்து 2 மி.லி. என்ற அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும், மொட்டுப் புழுவானது மொட்டுகளைத் தின்று சேதப்படுத்தும். இதைக் கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் மருந்து 2 மி.லி. அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து, பூக்கும் தருணத்தில் 15 நாள்களுக்கு ஒரு முறை தெளிக்கலாம்.

இலைப்பேன், அசுவினி, தத்துப்பூச்சி: சாறு உறிஞ்சும் பூச்சி வகைகள் இலை, தண்டு, குருத்து ஆகியவற்றிலிருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். இதைக் கட்டுப்படுத்த 3 சத வேம்பு எண்ணெய் அல்லது ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. அளவில் பாசலோன் 35 ஈசி அல்லது மிதைல் டெமெட்டான் 25 ஈசி மருந்தைக் கலந்து தெளித்தும் அல்லது 3 சத கார்போபியூரான் குருணை மருந்தை செடிக்கு 5 கிராம் என்ற அளவில் இடலாம்.

**நோய்கள்:**

**கரும்புள்ளி நோய்:** இலைகளில் வட்ட வடிவமான கருமையான புள்ளிகளாக உருவாகி, இலைகளை உதிரச் செய்துவிடும். இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் கார்பன்டைசிம் மருந்தை 2 கிராம் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும்.

சாம்பல் நோய்: இலைகளில் மேல்பரப்பில் வெண்மையான தூள் போன்ற பூசணம் போல வளர்ந்து இலைகளையும், மொட்டுகளையும் உதிரச் செய்துவிடும். இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் நனையும் கந்தகம் அல்லது ஒரு கிராம் கார்பன்டைசிம் மருந்தை கலந்துத் தெளிக்கலாம்.

நடவு செய்த முதல் ஆண்டில் ரோஜா பூக்கத் தொடங்கினாலும், பொருளாதார ரீதியாக இரண்டாம் ஆண்டிலிருந்துதான் நல்ல பலனைக் கொடுக்கும்.

கவாத்து செய்த 45-ம் நாள் முதல் பூக்கத் தொடங்கும் போது, நன்றாக மலர்ந்த ரோஜாப் பூக்களை அதிகாலையில் பறிக்க வேண்டும். இந்த தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து முறையாகப் பராமரித்தால் ஓராண்டில் ஹெக்டேர் பரப்பில் சுமார் 10 லட்சம் ரோஜா மலர்களைப் பறிக்க முடியும். தோட்டக் கலைத் துறை தேசிய தோட்டக் கலை இயக்கத்தின் மூலம் ரோஜா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 7,500 மானியம் வழங்கப்படுகிறது.

எனவே, ரோஜா பயிரிட்ட மற்றும் பயிரிட விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக் கலைத் துறை அலுவலர்களை அணுகிப் பயன் பெறலாம்.

**தென்னையில் ஊடுபயிர் செய்தால் கூடுதல் வருவாய் பெறலாம்!**

First Published : 23 Jun 2011 02:24:34 AM IST



சங்ககிரி: தென்னையில் ஊடுபயிர் செய்தவன் மூலம் கூடுதல் வருவாய் பெறலாம் என்று சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.செப்ந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி: இரண்டு தென்னை மரங்களின் இடைப்பட்ட பகுதியில் போதுமான சூரிய ஒளி கிடைப்பதால் தென்னந்தோப்புகளில் ஊடுபயிர் செய்யலாம். தென்னையில் ஊடுபயிர் செய்வதால் களைகளைக் கட்டுப்படுத்தி இடைவெளியை முறையாக பயன்படுத்துவன் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

இளவயது தென்னையில் ஊடுபயிர் (நடப்பட்டதில் இருந்து 7 ஆண்டுகள் வரை): மக்காச்சோளம், மஞ்சள், மரவள்ளி, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சேனைக்கிழங்கு, நிலக்கடலை, எள், காய்கறிகள், பருத்தி, பயறுவகைகள், சோயா மொச்சை போன்றவற்றை பயிரிடலாம்.

நடுத்தர வயது தென்னையில் ஊடுபயிர் (7 முதல் 20 ஆண்டுகள் வரை): பசுந்தாள் உரப்பயிரான சணப்பு பயிரிட்டு, பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்யலாம். இதனால் மண்வளம் கூடும்.

வளர்ந்த தென்னையில் ஊடுபயிர் (20 ஆண்டுகளுக்கு மேல்): வளர்ந்த தென்னந்தோப்பில் செய்யப்படும் ஊடுபயிர் நீண்ட காலத்துக்கு பின்பற்றக் கூடியதும், நிரந்தர வருமானம் அளிக்கக் கூடியதுமாகும். வாழை, கோகோ, அன்னாசி, மஞ்சள், வெண்டை, சேனைக்கிழங்கு,

செண்டுமல்லி, மிளகு மற்றும் மரவள்ளி போன்ற பயிர்கள் நன்றாக வளர்ந்து அதிக மகசூலையும், வருமானத்தையும் கொடுப்பதாக ஆராய்ச்சிகளால் கண்டறியப்பட்டுள்ளது.

தென்னையில் அதன் வயது, மண்ணின் தன்மை, பாசன நீரின் தரம் போன்றவற்றுக்குத் தகுந்த ஊடுபயிரை தேர்வு செய்து பயிரிட்டால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் கூடுதல் வருவாய் கிடைக்கிறது. மேலும், களைகள் வளர்வதும் கட்டுப்படுத்தப்படுகிறது. தென்னை விவசாயிகள் அவரவர் சூழ்நிலைக்கேற்ப ஊடுபயிர் சாகுபடி செய்து பலன் பெறலாம் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஆய்வு**

First Published : 22 Jun 2011 01:18:04 PM IST

பெரம்பலூர், ஜூன் 21: பெரம்பலூர் அருகேயுள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், தமிழ்நாடு அரசு வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ஆராய்ச்சி) என். பொன்னுசாமி, வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெறும் ஆராய்ச்சிகள், அட்மா திட்டத்தின் கீழ் நடைபெறும் விவசாய ஆர்வலர் குழுப் பயிற்சியை திங்கள்கிழமை பார்வையிட்டார்.

பின்னர், விவசாய ஆர்வலர் குழுவில் பங்கேற்ற விவசாயிகளிடம் அவர் கூறியது:

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். விவசாயிகள் தங்களது பகுதிகளில் வேளாண் கிடங்கில் உள்ள விதைகள் பற்றிய தகவல்களை, இனி கிராம நிர்வாக அலுவலகங்களிலேயே தெரிந்து கொள்வதற்கும், குறிப்பிட்ட வேளாண் கிடங்குகளில் விவசாயிகளுக்கு தேவையான விதைகள் இல்லையெனில், அவற்றை அருகில் உள்ள கிடங்குகள் அல்லது மாவட்டத்திலிருந்து பெற்றுத் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், அடுத்த ஆண்டு முதல் ஊராட்சிமன்ற அலுவலகத்திலேயே தொடு திரை அமைப்புடன் கூடிய கணினி வைக்கப்படவுஉள்ளது. அதன் மூலம் விதைகள், உரங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த தகவல்களை விவசாயிகளால் பெறமுடியும்.

அதற்கான தகவல் சேகரிப்பு பணி இன்னும் ஒரு வாரத்துக்குள் தொடங்க உள்ளது. வேளாண் அதிகாரிகள் சேகரிக்க உள்ள தகவல்களை, விவசாயிகள் தவறாமல் தெரிவிக்க வேண்டும்.

வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்கள் களை எடுக்கும் எந்திரம், அறுவடைக் கருவி உள்ளிட்ட இயந்திரங்களைச் சொந்தமாக வாங்கி, அந்தந்தப் பருவங்களில் அவற்றை வாடகைக்கு விட்டு சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்றார் அவர்.

மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எஸ். சிவகுமார், வேளாண் உதவி இயக்குநர் வே. விஜயகுமார், ரோவர் வேளாண் அறிவியல் மைய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. மாரிமுத்து உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 77.71 அடி**

First Published : 22 Jun 2011 01:01:53 PM IST

ஈரோடு, ஜூன் 21: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 77.71 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 4,086 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 14.50 டிஎம்சி.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 106.63 அடி**

First Published : 22 Jun 2011 02:30:06 PM IST

தஞ்சாவூர், ஜூன் 21: மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 106.63 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,933 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 14,999 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கல்லணையில் இருந்து வினாடிதோறும் காவிரி, வெண்ணாற்றில் தலா 4,063 கன அடி, கல்லணைக் கால்வாயில் 1,554 கன அடி, கொள்ளிடத்தில் 1,029 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

தினமலர்

**சந்தியூர் வேளாண் நிலையத்தில் விதைகள் விற்பனை துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2011,02:39 IST

பனமரத்துப்பட்டி: "சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள தரமான நெல் விதைகள், தானியம் மற்றும் காய்கறி விதைகளை வாங்கி விவசாயிகள் பயன் பெறலாம்' என, வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. சேலம் சந்தியூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் கூறியதாவது: நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கும் வகையில், சந்தியூர் வேளாண் நிலையத்தில், ஏ.டி.டி 36,39,43,45, 47, ஏ.எஸ்.டி. 16,கோ49,கோ50, டிஆர்ஒய்1,3 மற்றும் வீரிய ஒட்டு நெல் ரகம் கோஆர்எச்3 ஆகிய நெல் விதைகள் விற்பனைக்கு உள்ளது. கோழ்வரகு, சாமை, உளுந்து, எள் விதைகளும் விற்பனைக்கு உள்ளன. காய்கறி பயிர்களில் தக்காளி,கத்தரி, வீரிய ஒட்டு மிளகாய்,

முருகைகாய், கொத்தவரை, செடி அவரை, பாகற்காய், புடலங்காய், மற்றும் கீரை வகைகள் விற்பனைக்கு உள்ளன. விவசாயிகள் தரமான விதைகளை வாங்கி பயன்பெறலாம், என்றார்.

**விவசாயிகளின் விபரம் வேளாண்துறை சேகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2011,02:16 IST

நாமக்கல் : "நவீன வேளாண்மை மூலம் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில், சிறு, குறு விவசாயிகளின் அடிப்படை விபரம் சேகரிக்கப்படுகிறது' என, வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு உத்தரவின்படி, வேளாண் துறை மூலம் சிறு, குறு விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களில் நவீன வேளாண்மை தொழில்நுட்பங்கள் மூலம், உற்பத்தி திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல்கட்ட பணியாக சிறு, குறு விவசாயிகளின் அடிப்படை விபரங்களை சேகரிக்கும் பணி, நாமக்கல் வட்டாரத்தில் உள்ள, 34 வருவாய் கிராமங்களில் நடந்து வருகிறது. எனவே, அனைத்து சிறு, குறு விவசாயிகளும் தங்கள் கிராமத்துக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலரிடம், புள்ளி விரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், அடிப்படை புள்ளி விவரம் பதிவு செய்யும்போது, நில உரிமையார்களின் சிட்டா, பட்டா போன்ற ஆவணங்களை உடன் வைத்திருந்து காண்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல் கொள்முதல் மையம் துவக்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2011,00:44 IST

தர்மபுரி: தர்மபுரியில் நெல் கொள்முதல் மையம் துவங்க வேண்டும், என தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. தர்மபுரியில் தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் செங்கோடன் தலைமை வகித்தார். செயலாளர் சக்திவேல் வரவேற்றார். மாநில துணை தலைவர் ஆறுமுகம், மாநில தலைவர் சின்னசாமி ஆகியோர் கோரிக்கை குறித்து பேசினர். நெல் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதால், தர்மபுரி மாவட்டத்தில் நேரடி கொள்முதல் மையம் துவங்க வேண்டும். மழைக்காலங்களில் ஆறுகளில் இருந்து உபரியாக கடலில் கலக்கும் தண்ணீரை திருப்பி விட்டு, மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் நிரப்ப வேண்டும். கரும்பு டன்னுக்கு, 2,500 ரூபாய் அறிவித்து வெட்டு கூலியை ஆலையே ஏற்க வேண்டும் என்பதால், விவசாயிகளுக்கு எந்த பயனும் இல்லை. தனி நபர் பாதிப்பு காப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட பொருளாளர்

பழனி, மாவட்ட நிர்வாகிகள் வெங்கடேசன், லோகநாதன், ராஜா, அர்சுணன், அண்ணாமலை, சிவலிங்கம், ஒன்றிய நிர்வாகிகள் அரிசந்திரன், பரமசிவம், ராஜா, முனிராஜ், பரமசிவம், முருகேசன், அன்பு, மாரியப்பன், சுப்பிரமணி, காளியப்பன், சித்தப்பசெட்டி, குருசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். வெங்கடேசன் நன்றி கூறினார்.

**பலாப்பழம் வருகை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2011,02:30 IST

கோபிசெட்டிபாளையம்: பலா பழம் சீசன் துவங்கியதால், கோபி பகுதியில் பலாப்பழம் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளது. 60 முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. முக்கனிகளில் ஒன்றான பலாப்பழம் சீசன் தற்போது துவங்கி உள்ளது. தமிழகத்தில் ஊட்டி, கோடைக்கானல் மற்றும் தர்மபுரி ஆகிய பகுதிகளில் பலாப்பழம் விளைச்சல் அதிகம் உள்ளது. தவிர கேரளாவில் பலாப்பழ விளைச்சல் இந்தாண்டு அதிகரித்துள்ளது. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிக்கு பலாப்பழம் வரத்தாகிறது. கேரளா மற்றும் தமிழகத்தில் பிற பகுதியில் இருந்து கோபி மார்க்கெட்டுக்கு பலா வரத்து துவங்கி உள்ளது. சிறிய பழம் 60 முதல் 70 ரூபாய் வரையும், பெரிய பழம் 80 முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. பலா பழம் சீசன் துவங்கி உள்ளதால் அதிகளவில் மக்கள் விருப்பத்துடன் பலாப்பழத்தை வாங்கி செல்கின்றனர்

**1,450 டன் பொட்டாஷ் உரம் வருகை**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2011,02:27 IST

ஈரோடு : ஈரோடு மாவட்டத்தின் பயன்பாட்டுக்காக தனியார் உரக்கடைகளுக்கு 1,450 டன் பொட்டாஷ் வந்தது. இதுபற்றி, வேளாண் இணை இயக்குனர் அக்பர் கூறியதாவது: மேட்டூர் அணை, காலிங்கராயன் வாய்க்கால் திறந்ததை அடுத்து, ஈரோடு மாவட்டத்தில் விவசாயிகள் தங்கள் சாகுபடியை துவக்கியுள்ளனர். குறிப்பாக ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி பகுதியில் நெல், மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். விவசாயிகளுக்கு பயிரிட 1,028 மெட்ரிக் டன் விதை நெல் தேவைப்படுகிறது. கூட்டுறவு சங்கம், தனியார் கடைகளில் 1,100 மெட்ரிக் டன் அளவு விதை நெல் இருப்பு வைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா, நுண்ணூட்ட சத்துக்கள் கையிருப்பில் உள்ளன. டி.ஏ.பி., உரம் 2,650 டன், 1,300 டன் பொட்டாஷ் இரு வாரங்களுக்கு முன் ஈரோட்டுக்கு வந்தது. அவை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிக்கு அனுப்பி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 20ம் தேதி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக தனியார் உரக்கடைகளுக்கு இந்தியன் பொட்டாஷ் நிறுவனம், 1,450 டன்

பொட்டாஷ் உரம் அனுப்பியுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான யூரியா, காம்ப்ளக்ஸ் உள்பட இடுபொருட்கள் அனைத்தும் மாவட்டத்தில் உள்ள 14 வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள், 21 துணை வேளாண் விரிவாக்க மையங்களிலும் போதியளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தங்களுக்கு தேவையான இடுபொருட்களை பெற்று கொள்ளலாம். தனியார் உரக்கடைகளில் உரங்கள், அரசு நிர்ணயித்த விலைக்கே விற்க வேண்டும். அதிக விலைக்கு விற்பது தெரியவந்தால், அந்த உரக்கடைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு மானிய உதவி**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2011,00:30 IST

கம்பம் : காமயகவுண்டன்பட்டியில் தோட்டக்கலைத்துறை சார்பில் திராட்சை விவசாயிகளுக்கு மானிய உதவிகள் வழங்கும் விழா நடந்தது.தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் செந்தில்குமார் தலைமை வகித்தார். தோட்டக்கலை அலுவலர் மனோகரன் முன்னிலை வகித்தார். கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் முருகேஷ்பாபு வரவேற்றார். தங்க தமிழ்செல்வன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., சுப்புராயர், அ.தி.மு.க., நகர செயலாளர் சுந்தர், ஒன்றிய செயலாளர் இளையநம்பி, உட்பட பலர் பங்கேற்றனர்.

**ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 23,2011,02:27 IST

ஈரோடு : வாய்க்கால்களில் நீர் திறப்பையொட்டி, ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் நடவு துவங்கியுள்ளது. மஞ்சள் விலை குறைந்து விட்டதால், விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டவில்லை. உணவு பொருளாகவும், அழகு சாதனம் மற்றும் கிருமி நாசினியாகவும் மஞ்சள் பயன்படுகிறது. தமிழக அளவில் மஞ்சள் சாகுபடியில் ஈரோடு மாவட்டம் முதன்மை பெற்றுள்ளது. கடந்தாண்டு மஞ்சள் குவிண்டால் 17 ஆயிரம் ரூபாய் வரை விலைபோனது. தங்கத்தை விட மஞ்சளுக்கு மவுசு அதிகமாக இருந்ததால், எட்டு மாத பயிரான மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டினர். சென்றாண்டு ஈரோடு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பளவுக்கு மஞ்சள் சாகுபடி நடந்தது. இந்தாண்டு தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால்களில் நீர் திறப்பை ஒட்டி, மஞ்சள் நடவு பணியை விவசாயிகள் துவக்கியுள்ளனர். தற்போது, மாவட்டத்தில் 1,100 ஹெக்டேர் பரப்பளவுக்கு மஞ்சள் சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. மஞ்சள் அதிகளவு உற்பத்தியானதாலும், இருப்பு வைத்த மஞ்சள் அதிகம் விற்பனைக்கு குவிந்ததாலும், மஞ்சள் விலை படிப்படியாக குறையத் துவங்கியது. தற்போது, குவிண்டால் மஞ்சள் 6,000 ரூபாய் வரையே விற்கிறது. சென்றாண்டைப் போல, இந்தாண்டு விவசாயிகள் மஞ்சள் அதிகளவில் சாகுபடி செய்வரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு மாவட்ட அளவில் காலிங்கராயன் பாசனப் பகுதிகளான ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி பகுதியில்தான் அதிகளவில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. மஞ்சள் ரகத்தில் பி.டி.எஸ்., 8, 10, பி.எஸ்.ஆர்., 1 மற்றும் லோக்கல் ரகங்கள் பயிரிடப்படுகிறது. பவானிசாகர் ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்கனவே பதிவு செய்திருக்கும் விவசாயிகளுக்கு மஞ்சள் விதை வழங்கப்படுகிறது. நடப்பாண்டு மஞ்சளுக்கு விலை குறைந்ததால், இந்தாண்டு அதிகளவில் சாகுபடி இருக்காது. குறைந்தது 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுக்கு மஞ்சள் சாகுபடி நடக்கும் என, எதிர்பார்க்கிறோம். விவசாயிகள் தங்கள் நிலத்தில், ஒரே பயிரையே பயிரிடாமல் மாற்றி, மாற்றி பயிரிட்டு வருகின்றனர். அதனால், எங்கள் இலக்கை எட்ட முடியும். மஞ்சள் சாகுபடிக்கு தேவையான காம்ப்ளக்ஸ், யூரியா, சூப்பர் பொட்டாஷ் போன்ற உரங்கள் போதியளவில் இருப்பு உள்ளன. புதிதாக மஞ்சள் சாகுபடி செய்ய விரும்புவோருக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரிப்பு திட்டத்தின் கீழ், ஹெக்டேருக்கு 11 ஆயிரத்து 250 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. அந்த தொகைக்கு உண்டான பயிர் பாதுகாப்பு மருந்து மற்றும் உரம் வழங்கப்படுகிறது. தேவையான விவசாயிகள் அருகில் உள்ள தோட்டக்கலை துறை அலுவலரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் கூறினார்.

**பொரியல் தட்டை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,21:47 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில், பொரியல் தட்டைபயறுக்கு விலை உயர்ந்துள்ளது. கிணத்துக்கடவு பகுதியில் தக்காளி சீசன் முடிவடைந்துள்ள நிலையில், பொரியல் தட்டைபயறு சாகுபடி துவங்கியது. விவசாயிகள் பொரியல் தட்டைபயறுகளை பறித்து, கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வருகின்றனர். அங்கு கேரளா வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு ஏலம் எடுத்தனர். சோனாலி ரக பொரியல் தட்டைபயறு கிலோ ஒன்றுக்கு அதிபட்சமாக ரூ.12.50க்கும், சோனாலி ரக சிவப்பு தட்டையபயறு கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக 18 ரூபாய்க்கும் ஏலம் போனது.பொரியல் தட்டைபயறுக்கு கேரளாவில் மவுசு அதிகம் உள்ளது. கேரளா வியாபாரிகள் அதிகளவில் பொரியல் தட்டைபயறுகளை வாங்கி செல்வதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**காய்கறி விற்பனை ஜோர்**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,23:16 IST

திருப்பூர் : கடந்த சில வாரங்களாக மந்தமாக காணப்பட்ட காய்கறி விற்பனை, பள்ளிகள் திறந்துள்ளதையடுத்து சூடுபிடித்துள்ளது. திருப்பூர் தெற்கு உழவர் சந்தைக்கு பெருமாநல்லூர், நம்பியூர், சேவூர், தெக்கலூர் பகுதிகளில் இருந்து விவசாயிகள் விளைபொருட்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். காய்கறி வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து, விலை சீராக இருந்து வருகிறது.நேற்றைய விலை நிலவரம் (கிலோவுக்கு):கத்தரி 20; வெண்டை 20; தக்காளி 10; அவரை 25; பீர்க்கன்காய் 22; பாகல் 24; புடலை 12; சுரைக்காய் 5; அரசாணி 8; சின்ன வெங்காயம் 25 முதல் 34; பெரிய வெங்காயம் 13; முள்ளங்கி 15; பீட்ரூட் 12; பீன்ஸ் 30; முட்டை கோஸ் 10; உருளை கிழங்கு 16; காரட் 14; கறிவேப்பிலை 15; எலுமிச்சை 50; வாழைக்காய் 18; மாங்காய் 19; பச்சை மிளகாய் சம்பா 24, குண்டு 30 ரூபாய் என காய்கறி விலை நிலவரம் காணப்பட்டது.தெற்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராமலிங்கம் கூறுகையில், ""சந்தைக்கு காய்கறி வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது; விலை சீராக உள்ளது. விடுமுறைக்கு பின், பள்ளி விடுதிகள் திறக்கப்பட்டுள்ளதால், காய்கறி விற்பனை அதிக ரித்துள்ளது,'' என்றார். பூக்கள் விலை சரிவு: வைகாசி மாதம் முடிந்ததால், மார்க்கெட்டில் பூக்கள் விலை சரிந்துள்ளது. மல்லிகை ரூ.70; முல்லை 70; கனகாம்பரம் 100; அரளி 70; பட்டுப்பூ 30; சம்பங்கி 30 ரூபாய் என, கிலோவுக்கு 30 ரூபாய் வரை விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் வியாபாரிகள்தெரிவித்தனர்.

**காபி விவசாயிகள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,23:17 IST

தாண்டிக்குடி : காபி சிறு விவசாயிகள் சுய உதவிக்குழு கூட்டம், தலைவர் புரு÷ஷாத்தமன் தலைமையில் தாண்டிக்குடியில் நடந்தது. பொருளாளர் செல்வராஜ், ஆலோசகர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தனர். காபி வாரிய மண்டல ஆலோசனைக் குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தீர்மானங்கள்: கீழ்மலை பகுதியில் 12 ஆயிரம் எக்டேரில் காபி, மிளகு, ஆரஞ்சு பயிரிடப்பட்டுள்ளன. இதில் ஏழு ஊராட்சிகளை சேர்ந்த விவசாயிகள், வருவாய்த்துறை பணிகளுக்காக கொடைக்கானல் செல்ல வேண்டியுள்ளது. இதை தவிர்க்க தாண்டிக்குடி தனி தாலுகா, பத்திரவுப்பதிவு அலுவலகம் அமைக்க வேண்டும். தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். விவசாய தேவைக்கான துத்தநாகத்தின் விலை,

உயர்ந்துள்ள நிலையில், தோட்டக்கலைத்துறை மூலம் மானிய விலையில் வழங்கலாம். தோட்டக்கலை திட்டத்தின் கீழ் இடுபொருட்களை தரமாக வழங்க வேண்டும். விலங்குகள் தாக்குதலை சமாளிக்க, அரசு மூலம் கம்பி வேலி அமைக்க வேண்டும்.

**ஈரானுக்கு அனுப்புவதில் ஆர்வம் குறைந்தது தேயிலை ஏற்றுமதி சரிவடையும் நிலை**



*சுதானுகா கோசல்*

*கொல்கத்தா*

*ஈரான் நாட்டு நிறுவனங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் தேயிலைக்கான தொகையை செலுத்துவதில் கால தாமதம் செய்து வருவதால் ஏற்றுமதியாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இதனால் நடப்பு ஆண்டில் தேயிலை ஏற்றுமதி சரிவடையும் சூழ்நிலை உருவாகி உள்ளது.*

*ஆர்தோடக்ஸ்*

*இந்தியா, கடந்த 2008–ஆம் ஆண்டில் 1.58 கோடி கிலோ ஆர்தோடக்ஸ் தேயிலையை ஏற்றுமதி செய்தது. இது, 2009–ஆம் ஆண்டில் 1.15 கோடி கிலோவாக குறைந்தது. அதே சமயம் 2006–ஆம் ஆண்டில் ஈரானுக்கான ஆர்தோடக்ஸ் தேயிலை ஏற்றுமதி 66 லட்சம் கிலோவாக இருந்தது. இது, 2007–ஆம் ஆண்டில் 1.31 கோடி கிலோவாக சுமார் இரண்டு மடங்கு உயர்ந்தது. நம் நாட்டிலிருந்து அதிக அளவில் தேயிலை வாங்கி வரும் நாடுகளில் ஈரான் ஒன்றாகும். அந்நாடு இப்போது ஆண்டுக்கு 1.50 கோடி கிலோ அசாம் ஆர்தோடக்ஸ் தேயிலையை இறக்குமதி செய்கிறது. ஈரான் நிறுவனங்கள்*


நம்மிடம் வாங்கும் தேயிலைக்கான தொகையை செலுத்துவதில் குளறுபடி ஏற்படுத்தி வரும் நிலையில் நடப்பு ஆண்டில் நாட்டில் தேயிலை உற்பத்தி சரிவடையும் நிலையும் உருவாகி உள்ளது. இதனால் ஏற்றுமதி நிச்சயம் குறையும் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் கென்யாவில் தேயிலை உற்பத்தி நடப்பாண்டில் 3.50 கோடி கிலோ அளவிற்கு சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இந்திய ஏற்றுமதியாளர்கள் ஓரளவு நம்பிக்கையுடன் உள்ளனர். தேயிலை உற்பத்தியில் உலக அளவில் முதலிடத்தில் இருந்து வரும் கென்யாவில் மகசூல் குறைவதால் சர்வதேச சந்தையில் இந்திய தேயிலைக்கான தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈரான் நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ள நெருக்கடியை ஈடு செய்யும் வகை இது அமையும் என ஏற்றுமதியாளர்கள் நம்புகின்றனர். அங்கு ஆண்டுக்கு சுமார் 8 கோடி கிலோ தேயிலை பயன்படுத்தப்படுகிறது. ஈரானுக்கு அடுத்தபடியாக ரஷியா அதிக அளவில் ஆர்தோடக்ஸ் தேயிலையை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கிறது.

7 கோடி கிலோ

நம் நாட்டில், 2010–ஆம் ஆண்டில் 7 கோடி கிலோ ஆர்தோடக்ஸ் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ஆர்தோடக்ஸ் உற்பத்தியை குறைத்துக் கொள்ள தேயிலை தோட்ட உரிமையாளர்கள் பலர் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. மாறாக சி.டி.சி. ரக தேயிலை உற்பத்தியில் கவனம் செலுத்த அவர்கள் திட்டமிட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## அதிசய மாமரம்



திருச்சி பாய்லர் ஆலையில் உள்ள அன்னை இந்திரா நகரில் அறிவழகன் வீட்டில் இருக்கும் மாமரத்தில் வெட்டப்பட்ட கிளை துளிர்த்து அதில் கொத்து, கொத்தாக மாங்காய் காய்த்து தொங்குவதை படத்தில் காணலாம்.

தினகரன்

## தூத்துக்குடியில் உப்பு தொழில் அமோகம் உற்பத்தியாளர் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் 6/23/2011 2:03:45 AM



தூத்துக்குடி : தூத்துக்குடியில் தற்போது உப்பு உற்பத்தி அமோகமாக நடந்து வருகிறது. இதனால் உப்பு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் உப்பு உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது. இங்கு உற்பத்தியாகும் உப்பு பல்வேறு மாநிலங்களுக்கும் இந்தோனேசியா, மாலத்தீவு, பிலிப்பைன்ஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் வேம்பார் முதல் ஆறுமுகநேரி வரை 25 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் கடலில் இருந்து நேரடியாக தண்ணீர் கொண்டு வரப்பட்டு பாத்திகளில் தேக்கி உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. கடல் மட்டம் குறைந்து கால்வாய்கள் தூர்ந்து போனதால் ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு தற்போது உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக உப்பு உற்பத்தி சற்று மந்தமாக காணப்பட்டது. தற்போது வெயில் அதிகமாக இருந்தாலும் இதமாக வீசும் தென்மேற்கு பருவ காற்று காரணமாக உப்பு உற்பத்தி பணி மற்றும் உப்பு வாரும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. தொடர்ந்து உப்பளங்களில் உற்பத்தி செய்யப்படும் உப்பு அருகில் அம்பாரங்களாக குவித்து வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து லாரிகளில் அரவை மில்கள் மற்றும் குடோன்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகிறது. மேலும் தற்போது உப்புக்கு நல்ல விலையும் கிடைத்து வருகிறது. இதனால் உப்பு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.